# முதல் இடைப் பருவத் தேர்வு – 2024

## ஏழாம் வகுப்பு

நேரம்: 1.30 மணி **தமிழ்** மதிப்பெண்கள்:50

6x1=6

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. 'நெறி' என்னும் சொல்லின் பொருள் ________
அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம்
2. பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம் ________
அ) கலம்பகம் ஆ) பரிபாடல் இ) பரணி ஈ) அந்தாதி
3. வானில் ________ கூட்டம் திரண்டால் மழை பொழியும்.
அ) அகில் ஆ) முகில் இ) துகில் ஈ) துயில்
4. தமிழின் கிளைமொழிகளுள் ஒன்று ________
அ) உருது ஆ) இந்தி இ) தெலுங்கு ஈ) ஆங்கிலம்
5. தமிழகத்தில் புலிகள் காப்பகம் அமைந்துள்ள இடம் ________
அ) வேடந்தாங்கல் ஆ) கோடியக்கரை இ) முண்டந்துறை ஈ) கூந்தன்குளம்
6. நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது ________
அ) பச்சை இலை ஆ) கோலிக்குண்டு இ) பச்சைக்காய் ஈ) செங்காய்

4x1=4

**II கோடிட்ட இடங்களை நிரப்புக:**

7. வாழை, கன்றை ________
8. பேசுவதும் கேட்பதும் மொழியின் ________
9. 'காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு' என்று அழைக்கப்படும் விலங்கு ________
10. முதலெழுத்து ஒன்றி வரத் தொடுப்பது ________

4x1=4

**III பொருத்துக**

11. நச்சரவம் – நோன்பு
12. கிளைமொழி – மிகுந்த சுவை
13. விரதம் – விடமுள்ள பாம்பு
14. அதிமதுரம் – தெலுங்கு

4x2=8

**IV எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி**

15. தமிழ்மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?
16. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?
17. மொழியின் இரு வடிவங்கள் யாவை?
18. காடு – வரையறுக்க.
19. காட்டுப்பூக்களுக்கு எதனை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்?

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



**V எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி** **2x2=4**

20. குற்றியலுகரம் என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.
21. திணை எத்தனை வகைப்படும் அவை யாவை?
22. ஔகாரம் எப்பொழுது முழுமையாக ஒலிக்கும்.

**VI எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி** **2x3=6**

23. 'எங்கள் தமிழ்' பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.
24. பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.
25. நாவல் மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் கூறுவன யாவை?
26. காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகளை எழுதுக.

**VII அடிபிறழாமல் எழுதுக.** **3+2=5**

27. 'அருள்நெறி' எனத் தொடங்கி 'அன்பறமே' என முடியும் எங்கள் தமிழ் பாடலை எழுதுக.
28. 'வாய்மை' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**VIII அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** **3x2=6**

29. கலைச்சொல் தருக.

    அ) puppetry ஆ) Magazine

30. எதிர்பாலுக்குரிய பெயர்களை எழுதுக.

    அ) மகளிர் x ஆ) மாணவன் x

31. தொகைச்சொற்களை விரித்து எழுதுக.

    அ) முக்கனி ஆ) முத்தமிழ்

**IX கட்டுரை (அல்லது) கடிதம் எழுதுக.** **1x7=7**

32. தாய்மொழிப் பற்று என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

*(அல்லது)*

நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

***/***

www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com